மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :

(அ) & (ஆ) அரசம்பட்டு, தியாக துருகம், டி. பாண்டலம், எஸ். கொளத்தூர், வாணையாம்பட்டு, சித்தேரிப்பட்டு, குலங்குறிச்சி, பள்ளகச்சேரி, கலயநல்லூர், மூங்கில் துரைப்பட்டு, பாவந்தூர். மேலபழங்கூர், பகண்டை, அரியலூர், அத்தியூர், சம்போஜி, மோட்டாம்பட்டி, புதுப்பாளையம், ஏந்தல், மரூர், மாடம்பூண்டி, லால்பேட்டை, கள்ளக்குறிச்சி, பழைய திருவாங்கூர், பால், நாரோலை, மேலப் பழங்கூர், சித்தல், சோழம்பட்டு, நெடுயானூர், சேஷசமுத்திரம், எஸ். பி. பாளையம், ஊராங்கனி, சிட்டாந்தாங்கல், புத்திரப்பட்டு ஆகிய கிராமங்களுக்கு மினி பஸ் விடும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது.

திம்மாபுரம் அரசு பழத்தோட்டம்.

*வினா எண் 353—டாக்டர் கே. சமரசம் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தர்மபுரி மாவட்டம், காவேரிப்பட்டணம் தொகுதியிலுள்ள திம்மாபுரம் அரசுப் பழத்தோட்டம் இலாபத்தில் நடைபெறுகிறதா?

(ஆ) ஆம் எனில், அப்பழத் தோட்டத்தை மேலும் விரிவாக்கும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) ஆம்.

(ஆ) இல்லை. தற்சமயம் மேற்படி பழத் தோட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கம் ஏதும் இல்லை. என்றாலும் இந்தப் பண்ணையின் வேலைகளைத் தீவிரப்படுத்தி அதிகமான பழக் கன்றுகளை உற்பத்தி செய்து அதிக இலாபத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மருதையாற்றின் குறுக்கே அணை.

*வினா எண் 354—திரு. கே. சௌந்திரராசன்:— மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

அரியலூர் பகுதியில் மருதை ஆற்றின் குறுக்கே அணை கட்டி பாசனம் பெருகிட வழி வகுக்கும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா?

1979 மார்ச் 12]

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

ஆம். இந்தப் பகுதியிலுள்ள மருதையாற்றின் நீர் உப்புத் தன்மை உள்ளதாக இருப்பதால் இதுபற்றி ஆராய ஒரு உயர் மட்டக் குழு அமைக்கும் செயற் குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இக் குழு அமைக்கப்பட்டு அதன் அறிக்கை கிடைத்த பிறகுதான் இத்திட்டம் பரிசீலிக்கப்படும்.

மாரங்கியூர் பாசனக் கால்வாய்.

*வினா எண் 355—திரு. கோ. ரகோத்தமன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம் திருக்கோவிலூர் வட்டம், மாரங்கியூர் பெண்ணையாற்று நீர் பாசனக் கால்வாய் (கிரேடுவால்) பணிகள் பாதியில் நிறுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) அதனை முழுமையாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) இல்லை. திட்டமிட்டபடி அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டு விட்டன.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

சிதம்பரம் பால் வழங்கு யூனியன்.

*வினா எண் 356—திரு. துரை கலியமூர்த்தி : மாண்புமிகு கிராமத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1977–78-ல் சிதம்பரம் பால் வழங்கும் யூனியனில் 7 இலட்ச ரூபாய் நட்டம் என்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன ?

(இ) நட்டம் வராமல் இருக்க என்ன நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது ?